# திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்)

- பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், மகாகவியும், சிவானுபூதிச் செல்வரும் ஆகிய சேக்கிழார் பெருமான் வேண்டுகோளின்படி, திருக்குறள் வழி நின்று பாடியருளியது பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம்.
- இது திருத்தொண்டர் தொகையின் பேருரையாய் நின்று நிலவுவது.
- பொதுவாக புராணம் என்பவையெல்லாம் புனைந்துரை எனக்கொள்ளப்படும். ஆனால், இது கி.பி. 3ஆம் நுற்றாண்டு முதல் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை உள்ள கால எல்லையில், தமிழ்நாட்டின் சமயம், நாகரீகம், பண்பாடு, கலை முதலியவற்றை வரலாற்று முறையில் கற்றுணர வழி செய்யும் வரலாற்று மூலமாக (Source of History) கொள்ளப்படும் தனிச்சிறப்பை உடையது.
- திருமுறைகளின் வரலாற்றையும், அவற்றின் ஆசிரியர்கள் வரலாறு உளநிலை என்பவற்றையும், அவற்றின் பொருணிலையையும் உள்ளவாறு உணர்வதற்கு இப்புராணம் இன்றியமையாதது.
- இது தோடுடைய செவியன் என்னும் திருநெறி தமிழோடு ஒத்த அருட்பெருமாண்புடையது எனக் கண்டு சிவானுபூதிச் செல்வர்கள் இதனை ஏனைய பதினொரு திருமுறைகளோடு சேர்த்துப் பன்னிரண்டாம் திருமுறையாக வகுத்து திருமுறைகளின் எண்ணிக்கையை முற்றுவித்தனர்.
- இதனால், புறவிருள் நீக்கிப் பொருள்களை காட்டும் ஞாயிரு பன்னிருவகைப்பட்டாற்போல, அகவிருள் நீக்கி மெய்பொருளை தெளிவிக்கும் திருமுறைகளும் பன்னிரண்டு வகைப்பட்டன.
- இப்பன்னிரு திருமுறைகளே சிவநெறிக்குத் தலையாய பிரமாண நூல்களான இலக்கியங்கள் ஆகும்.

-----*****-----*******-----